பக்கங்கள்: 8  Registered as a Newspaper

New Master Institute
B. M. C. Lane, JAFFNA.
A/L 89
Saturday & Sunday
✶ ZOOLOGY ✶
திரு. நாகநாதன்
8.30 சுவாசத் தொகுதி நடைபெறுகிறது.
11.30 நரம்புத் தொகுதி விரைவில் ஆரம்பம்

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

New Master Institute
B. M. C. Lane, JAFFNA
A/L 89
Saturday & Sunday
✶ PHYSICS ✶
திரு. வர்ணம்
அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன
புதிய பிரிவு ஆரம்பம்
JULY 2nd

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ வருடம் ஆனி மீ 15 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்ஜா பிறை 14 ( 29 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 118

# இந்திய உபதளபதி யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் திடீர் விஜயம்

## முக்கிய பிரமுகர்கள் பலரை சந்தித்துப் பேச்சு நடத்தினர்

— அலுவலகச் செய்தியாளர்: சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்திய இராணுவ உப தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ரெட்றிகன் நேற்று யாழ்ப்பாணத்துக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் முன்னேற்றம் கண்டுள்ளதாகக் கூறப்படும் இப்போதைய சூழ் நிலையில் –

உப தளபதி ரெட்றிகனின் திடீர் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.

உபதளபதி நேற்று யாழ். நகரில் சுமார் நான்கு மணி நேரம் தங்கியிருந்தார். பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கக்கூடிய பிரமுகர்கள் பலருடன் அவர் பேச்சுக்கள் நடத்தினர்.

யுத்த நிறுத்தத்தின் அவசியத்தைப் பிரமுகர்கள் பலரும் வற்புறுத்தியதாகத் தெரிகிறது. இது தொடர்பாகக் குறிப்பிடத்தக்க தகவல்கள் ஏதும் பேச்சுவார்த்தையின்போது வெளியிடப்படவில்லை.

எனினும் சுமுகமான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடியவாறு ஒருபடி முன்னேற்றம் காணப்பட்டு வருவதாக அவர் கோடிட்டுக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு ரூ.35 லட்சம் நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாத அசம்பாவிதத்தின் போது இந்நிறுவனத்தில் இருந்த பல உபகரணங்கள் சூறையாடப்பட்டிருந்தன.

இதன் காரணமாக பல பயிற்சிநெறிகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து கல்லூரி அதிபர் யாழ். அரச அதிபருக்கு பாதிப்புகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக தொழில் நுட்பக் கல்லூரிக்கு 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுக்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

## ஊனமுற்றவர்களுக்கும் காயமடைந்தோருக்கும் நஷ்டஈடு கிடைக்கும்

### புனர்வாழ்வு நிதியம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கடந்த அக்டோபர் பத்துக்குப்பின் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர்களுக்கும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்றவர்களுக்கும் நஷ்டஈடு வழங்க அகதிகள் புனர்வாழ்வு நிதியம் முடிவு செய்துள்ளது.

இந்தத் தகவலை யாழ்-கண்டி வீதியிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிதிய பொறுப்பாளர் திரு. வி. பரமசாமி உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவைப் பெறுக்கொள்வதற்குப் பாதிக்கப்பட்டவரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும் —

இவ்வாறுக மூலப்பிரதியை இணைத்து விண்ணப்பிப்பவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பாதிப்புக்கு ஏற்ற விதத்தில் உடனடி நஷ்டஈடு வழங்கப்படும்—

இந்த நஷ்டஈடு 500 ரூபா முதல் அதற்கு மேற்பட்ட தொகையில் இருக்கும்— என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## செட்டிகுளத்தில் நடந்த தாக்குதலில் 4 ஜவான்கள் பலி!

கொழும்பு, ஜூன் 29

இந்திய அமைதிப் படையினர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 ஜவான்கள் கொல்லப்பட்டனர் என்றும் 5 ஜவான்களைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

வவுனியாப் பகுதியில் செட்டிகுளம் என்னும் இடத்தில் போராளிகள் மறைந்திருந்து இத்தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் 3 ஜவான்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## 2 நாட்களில் 5பேர் கொலை!

கொழும்பு, ஜூன் 29

தென் மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமையில் இருந்து 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை ஹம்பாந்தோட்டையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கால்நடைகளுக்கு கோமாரி: தடை மருந்து ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கால்நடைகளுக்குப் பரவி வரும் கோமாரி நோய்க்கான தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கைகளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

அண்மைக்காலங்களில் வடபகுதியிலும் கோமாரி நோயினால் சில கால்நடைகள் இறந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்பொழுது கோண்டாவில் திருநெல்வேலி, கந்தரோடை, சங்கானை, பளை ஆகிய இடங்களில் தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

எனவே இந்தப் பகுதிகளில் உள்ள கால்நடை சொந்தக்காரர்கள் அருகிலுள்ள கால்நடை வைத்தியரை அணுகி நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## வாழ்வகம் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29

விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படுகிறது.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக இந்த வாழ்வகம் அமைந்துள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வகத்தைத் திறந்து வைப்பார். (ஒ)

[சிறப்பிதழ் உள்ளே]

## நயினையில் திருடிய நவநாகரிகப் பெண்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனைத் தரிசிக்க வந்த பக்தர்களிடம் திருடர்கள் சிலர் தமது கைவரிசையைக் காட்டினர்.

அப்படித் திருடியவர்களில் பெண்களும், குறிப்பாக நவநாகரிகப் பெண்மணிகளும் அடங்குவர்.

நேற்றைய தேர்த் திருவிழாவின் சன நெரிசலைப் பயன்படுத்தியே திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டினர்.

ஆனால் இவர்களில் பலரும் அங்கு தொண்டு புரிந்துகொண்டிருந்த தொண்டர் ஸ்தாபனங்களின் அங்கத்தவர்களிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

களவுபோன பொருள்களில் பெரும்பாலானவை அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன. (ஒ-7)

## பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ நயினை அம்பாள் தேர்ப்பவனி

### அமைதிப்படையினர் நற்பணி

— நயினையிலிருந்து அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூன் 29

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் நேற்றுத் தேரேறிப் பவனி வந்தாள். பக்திமயமான சூழலில் தேர்த்திருவிழா இடம் பெற்றது.

அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த தொண்டர் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும், அமைதிப் படையினரும் கட்டுக்கடங்காத மக்கள்வெள்ளத்தை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய தேர்த் திருவிழாவுக்கு குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும், குடாநாட்டுக்கு வெளியே இருந்தும் பக்தர் வெள்ளம் அலையலையாக வந்து சேர்ந்தது, கடல் அலை தோற்றுவிடுமோ எனும் அளவுக்கு மக்கள் அலை அம்பாளைத் தரிசிக்கத் திரண்

( 6ஆம் பக்கம் பார்க்க )

### முச்சந்தி முரளி



நாகரீகப் பேர்வழி போல் நடித்து, நயினை அம்பாள் சந்நிதியில் பாவம் செய்ய நினைத்தவை தப்பிறது கஷ்டம் தான் பாருங்கோ..!

## ஓடியவர் மீது சுட்டதில் காயம்

யாழ்ப்பாணம் ஜூன் 29

இந்திய அமைதிப் படையினரைக் கண்டு ஓடியவர் மீது அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஒருவர் காயமடைந்தார்.

ஏழாலையில் திங்கட்கிழமை மாலை 6-30 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது:-

சூட்டுக் காயங்களுக்கு இலக்கான பி. தவேந்திரன் என்பவர் தமது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்.

அப்போது இந்திய அமைதிப்படையினர் ரோந்து வருவதைக் கண்டு அவர் ஓட்டம் பிடித்தார்.

இதனை அடுத்து படையினர் அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் அவர் காலில் காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சத்திரசிகிச்சையின் பின்னர் அவரது கால் அகற்றப்பட்டது.

30 வயதுடைய மேற்படி நபர் வாய் பேசமுடியாதவர் என்பது குறிப்பிடத்தக்கது

## படகும் மீனவரும் எங்கே?

தாளையடி, ஜூன் 29

உடுத்துறையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இயந்திரப் படகு ஒன்று நான்கு நாட்களாகியும் கரை திரும்பவில்லை.

இப்படகுக்கும் அதில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களுக்கும் என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

காணாமல் போன படகைத் தேடிச் சென்ற படகுகளும், ஏமாற்றத்துடன் கரை திரும்பி உள்ளன. (ஒ-144)

### சுபநேரம்

29 - 06 - 1988
ஆனி - 15
புதன்கிழமை
சுபநேரம்:
04.26 முதல் 05.56 வரை
ராகுகாலம்:
11 56 முதல் 01.26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்

## கடத்தப்பட்ட கந்தசாமியை தாமதியாது விடுவிக்குமாறு

### ரி. ஆர். ஆர். ஓ. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் (ரி. ஆர். ஆர். ஓ.) ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான திரு. க. கந்தசாமியை தாமதியாது விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் இது சம்பந்தமாக விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஸ்தாபக அங்கத்தவருள் ஒருவரான திரு. க. கந்தசாமி கடந்த 19-6-88 ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமற் போய்விட்டார்.

தமிழர்களின் நலன் கருதி மனித உரிமை நடவடிக்கைகளிலும், புனர்வாழ்வு விடயங்களிலும் பெரிதும் முன்னின்று உழைத்து சர்வதேசப் புகழ்பெற்றஇவர் காணாமலிருப்பது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அவர் எவ்வித தீங்குமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பணிவன்புடன் வேண்டுகிறது. (அ)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கிய நிதியை வழங்குவதில் இழுபறி!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ் போதனா வைத்தியசாலையின் மறுசீரமைப்பிற்கென புனர் நிர்மாண அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 39 லட்சம் ரூபாவை வழங்குவதில் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

அரச உயர் வட்டாரங்கள் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தன.

கடந்த சில வருடங்களாக யாழ் போதனா வைத்தியசாலை இராணுவ நடவடிக்கைகளினால் பெரும் சேதத்துக்குள்ளாகியது.

கட்டிடங்கள், தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் என்பன பெருமளவில் சேதத்திற்குள்ளாகி இருந்தன.

இச்சேதங்களை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி இவற்றை மறுசீரமைப்பதற்கு உதவும்படி யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் யாழ் அரசாங்க அதிபர் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

இவ் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டிருந்த புனர்நிர்மாண அமைச்சு 39 லட்சம் ரூபாவை மறுசீரமைப்பிற்காக ஒதுக்கீடு செய்திருந்தது.

39 லட்சம் ரூபா மறுசீரமைப்பிற்கு போதாது என்று போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் குறைப்பட்டுக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இயந்திரப்படகில் மீன்பிடிக்க அனுமதி

தாளையடி, ஜூன் 29

வடமராட்சி கிழக்கில் மீனவர்கள் இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதிகாலை 5 மணி முதல் பகல் 10 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் மீனவர்கள் இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிக்கலாம்.

இயந்திரப் படகுகள் வைத்திருப்பவர்கள் 'பாஸ்' பெற்றே கடலுக்குச் செல்லவேண்டும். (ஒ-144)

## 150 ஆவது ஆண்டு பூர்த்தி: யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் யாகம்

யாழ்ப்பாணம் ஜூன் 29

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் 150 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நேற்று யாகமும், பூசைகளும் நடைபெற்றன. காலை தொடக்கம் நண்பகல் வரை இவை நடத்தப்பட்டன.

யாகம் பிரம்மஸ்ரீ கிருஷ்ணய்யர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் நடத்தப்பட்டது.

யாகத்திலும் பூசைகளிலும் பெரும் எண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன் லேன், நல்லூர். (4073)

Lohmann வெள்ளை சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

... வி... T. V ரேடியோ, பூஸ்டர் அன்ரனா வயர் சுவர்க் டிகாரங்கள் ... கள், மின் விசிறிகள், சைக்கிள் அடிப்புகள், T. V ... றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் ... பொருட்கள். பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

Uplands Farm கூடிய சீக்கிரத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையும் Lohmann பிறவுண் சேவல் குஞ்சுகள் (29-6-88) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. முகவரி இல 9, சந்தையாலேன், குருவத்தை றோட், சுன்னாகம் ஸ்டேசனுக்கு அண்மையில். (4730)

3 Sri தொடர் இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிரிஜ் பர்ஞ மொடல் கார் விற்பனைக்குஉண்டு. ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ் உடுப்பிட்டி. (4581)

தேக்கு அலுமாரிகள், கட்டில்மெத்தைகள் விட்டுப் பாவனை ShowCase (தேக்கு), சாப்பாட்டு மேசைகள், திரைகள்காரியாலயமேசைகள், கடை ShowCase(பெரிது), கண்ணாடிமேசைகள், இரும்புத் தளபாடங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியா ராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக் சந்திக்கு அருகில்) (4549)

**SALE**

Remingtan English Type writer 18 inch carriage contact, Tharmaratnam. 12. New Road, Athiady Jaffna. (4743)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில். (4151)

கோழிக்குஞ்சு விநியோகம், நல்லஇன செட்டு பாம்சேவல், புரொயிலர்க்குஞ்சுகள் 1-7-88-ல் விநியோகிக்கப்படும். A.J. சுப்பிரமணியம் 45, சொழும்புத்துறை வீதி (சந்தைபாதா கோவில் அருகாமை) யாழ்ப்பாணம். (4747)

## தேவை

கைத்தொழில் நிலையம் ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. தங்கி இருந்து வேலைசெய்யக் கூடியவர்களும் விரும்பத்தக்கது மங்களபதி, பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, சங்கிலியன் வீதி, நல்லூர். (4556)

### மணமகன் தேவை

இந்து உயர் வேளாள குல 26 வயதுடைய மணப்பெண்ணுக்கு நற்பண்புடைய மணமாகாத அல்லது மணமாகி தாரமிழந்த மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o 262 உதயன் யாழ்ப்பாணம் (4744)

B. Sc விஞ்ஞான ஆசிரியைக்கு செவ்வாய் தோசமில்லாத சைவ போசனமுடைய விஞ்ஞானப் பட்டதாரி மணமகன் தேவை. தொடர்புகொள்ளவும், C/o 253, உதயன் யாழ்ப்பாணம். (4745)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### கலர் படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

### ரேனியோ - தட்டச்சு

தமிழ் - ஆங்கில தட்டச்சு Typewriting ரேனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல 138, நாவலர் றோட், மனோ ராச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-5296)

### ராதையின் நெஞ்சம்

தீக்குள் விரலை வைத்தால் நாவலாசிரியர் K. S ஆனந்தன் எழுதிய 'ராதையின் நெஞ்சம்' காதல், சோகம் மர்மம் அத்தனையும் நிறைந்த புதுமையான நாவல் 200 பக்கங்கள் 30/- செங்கை ஆழியான் எழுதிய உண்மைக்கதை மழைக்காலம் 20/- ரூபா, பூபாலசிங்கம் புத்தகசாலை ,யாழ்ப்பாணம், விரைவில் வெளிவருகிறது பூம்பனி மலர்கள். கானகத்தின் கானம். (4712)

### தவறிவிட்டது

1967. 7. 2-ல்யாழ்நகரில் பிறந்த மாணிக்கம் ரவிராஜ், பத்மா இல்லம் திருநகர் கிளிநொச்சி ஆகிய என் அடையாள அட்டை கிளிநொச்சி யாழ் பஸ்சில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மேல் முகவரிக்கு கிடைக்கச் செய்யவும் சன்மானம் வழங்கப்படும். (4742)

### கல்வி

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

---

# கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Computer Programming in BASIC & COBOL.**

**Week Day Batch** ஆரம்பம்:
01 - 07 - 88 - 9.00 a. m.

**IDP** K. K. S. Road (சிவன் கோவிலடி) யாழ்ப்பாணம்.

★ தெல்லிப்பளை கிளையிலும், கரவெட்டி கிளையிலும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன. (சி5563)

---

## பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்கள் பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா? முன்னணி பாடசாலைகளில் இடம்பெற வேண்டுமா?

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

புலமைப்பரிசில் பரீட்சை புத்தக வெளியீட்டாளர்களான அஸ்ரன் பதிப்பகம் ஆரம்பிக்கும் ஓகஸ்ட் 14ம் திகதி நடைபெறவுள்ள

# ஆண்டு 5 புலமைப்பரிசிற் பரீட்சைக்கான 1½ மாத துரித பயிற்சி வகுப்புகள்

பாடங்கள்: **தமிழ், கணிதம்**

★ யாழ்நகரில் திறமைவாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை.
★ நாளாந்தம் அச்சடித்த பயிற்சிகளும் செய்முறைகளும்.
★ வார நாட்களில் (5 நாட்கள்) பிற்பகல் 3 - 5 மணிவரை
யூலை 11ஆம் திகதியின் பின் மு. ப. 9—12 மணிவரை

## ஆரம்பம்: 4-7-88

விபரங்களுக்கு பெற்றோர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

# அஸ்ரன் இன்ஸ்ரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ம் மாடி) (C 4934)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்
29-06-88



### குருசுப்பிள்ளை செபமாலை

(இருபாலை கிழக்கு)

தோற்றம்: 10-07-1928 மறைவு: 30-05-1988

எங்கள் இல்லத்தின் தெய்வமாக பிரகாசித்து அன்பாய், பண்பாய் பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்தில்நற்பிரசைகளாய் வாழ நல்வாழ்வுக்கு வழி காட்டிய எம் தந்தையே எம் வாழ்வின் ஒளிச் சுடராய் இருந்து இறைவனடிசேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம். உமது ஆத்மா என்றென்றும் தோன்றாத் துணையாய் நிற்கும் என்னும் நினைவு எம் உள்ளத்தை விட்டு அகலாது.

அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இருபாலை கிழக்கு கோப்பாய்.

அன்னாரின் பிரிவால் துயருறும், அன்பு மனைவி, அருமைச் செல்வங்கள், அன்பு மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(4770)

---

# கடனுக்குரிய வட்டியே அடகு வைத்தோரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

விவசாயக் கடனுக்கு அறவிடப்படும் வட்டி விகிதமே நகை அடகு வைத்தோரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டும்.

யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடகு வைத்தோர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் அண்மையில் யாழ் சைவ பரிபாலன சபை நாவலர் ஆசிரம மண்டபத்தில் நடந்தது.

அப்பொழுது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பலாலிக்கு நகைஅடகு எடுக்கப்போன இடத்தில் உயிரிழந்தவருக்கும் இராணுவ நடவடிக்கைகளில் உயிரிழந்தவருக்கும் கூட்டத்தில்இரண்டு நிமிடமான மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொத்துவில் தொகுதி விவசாயிகள் சம்மேளனத்தின் பிரதிநிதி ஜனாப் ஈஸ்டன் இப்ராஹிம், சட்டத்தரணி ஏ. ஏ. லத்தீப், கிளிநொச்சி அடகு வைப்போர் பாதுகாப்புச் சங்கப்பிரதிநிதி திரு. எம். இராமநாதன் பரந்தன் அடகு வைப்போர் சங்கப் பிரதிநிதி திரு. வ. சிவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்

திரு. குமரேசன் தலைமை வகித்தார். கூட்டத்தில்ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட மற்றும் இரு தீர்மானங்கள் வருமாறு.-

(1) அடகு வைத்த நகைகளைக் கொழும்புக்கு கொண்டு போன காலம் தொடக்கம் மீட்கும் வரை வட்டி அறவிடப்படக்கூடாது.

(2) நகைகளை மீட்பதற்கு முதலும் வட்டியும் கட்டியவர்களுக்கு அவர்கள் பணம் செலுத்திய திகதியில் இருந்து மீளக் கொடுக்கப்பட்ட அல்லது அல்லது கொடுக்கப்படும் திகதி வரை வட்டிகொடுக்கப்பட வேண்டும். (இ-ஏ)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

வட்டுக்கோட்டை, ஜூன் 29

யாழ்ப்பாணம் சுகாதாரசேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையினால் நிரந்தர காவலாளிகள் பதவிகளுக்கானவிண்ணப்பங்களும். காரியாலய காரிய சேவகர் பதவிக்கான விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு ஜூன்30 வியாழக்கிழமையாகும். (சி-161)

## சீசன் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்.29

அடுத்தமாதத்திற்கான சீசன் டிக்கற் வழங்கும் வேலைகள் யாழ். பஸ் நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளன.

யாழ். பஸ் நிலையத்திலுள்ள பிரத்தியேக சீசன் வழங்கும் பிரிவில் வயதுவந்தவர்களுக்கான அடுத்தமாத சீசனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை சீசன் டிக்கற் வழங்குதல் தொடர்ந்து நடைபெற இருக்கிறது. லீவு நாட்களிலும் சீசன் வழங்கும் கருமபீடம் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)

## முத்துஐயன்கட்டு விவசாயிகள் இடம் பெயர்வு

ஒட்டுசுட்டான், ஜூன் 29

முத்து ஐயன்கட்டு, இடதுகரை விவசாயிகள், தாங்கள் செய்த விவசாயத்தையும் விட்டுவிட்டு இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்பகுதியில் இந்திய அமைதிப் படையினர் அடிக்கடி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (ஓ-113)

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 29

பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் 14 பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வது வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று 29 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

இந்தப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் கழகத்தலைவர் திரு.ஆ.செல்லையா தலைமையில் நடைபெற உள்ளன.

பிரதம விருந்தினராக கழகக் காப்பாளர் திரு. ... கலந்து கொள்ளுவார். (இ-சி)

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



### இராமு கதிரவேலு

பிறப்பு: 04-07-1912 இறப்பு: 30-05-1988

எமது இதயங்களில் என்றும் நீங்கா அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும் அன்பர்கள்
ப. சிதம்பரப்பிள்ளை
சம்பரபவனம் ,மாவிட்டபுரம் (4771)

---

## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

★ Computer Programming in Basic Language
ஆரம்பம்:
**திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்: 01-07-88**
**பயிற்சிக் காலம்: 40 நாள்**
**சனி, ஞாயிறு வகுப்புகள்: 02-07-88- பயிற்சிக் காலம் 2 மாதம்**
**கட்டணம்: 750/- மாத்திரம்** (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (Compatable) கம்பியூட்டரில் கூடிய நேர செய்முறை பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ Computer Diploma
Computer Programming and Data Processing in Basic and Cobal Language

**பயிற்சிக் காலம்: 6 மாதம்**

Lecturers: S. S. Uththaman
R. S. Subaji A. I. D. P. M.
(Programmer-University Jaffna.)

**விண்ணப்ப முடிவு நாள்: 30 - 06 - 88**

# UNIKCO COMPUTER CENTRE

**No 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
(உப தபாற் கந்தோர் அருகாமையில்)

(C/5569)

---

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி





திரு. ச. ஞானமூர்த்தி
அன்னை மடியில் :- 18.09.1928
ஆண்டவன் அடியில் :- 10.07.1987

வீரவேங்கை
கெ. சயந்தன் (ஹரன்)
அன்னை மடியில் :- 22.03.1969
வீரமண்ணில் :- 04.07.1987

**திதி: 29 - 06 - 1988**

மண்ணை மீட்கச் சென்ற வீரவேங்கையே! - நீ
மண்ணுக்கே போன நாளய்யா இன்று
உன்னைக் காணச் சென்ற தந்தை உயிரும்
உன்னுடனே போனதையா

சயந்தா எனும் எங்கள் சந்தனபுஷ்பமே!
சாகாத உன் இலட்சியங்கள்
வெற்றியையும் விடுதலையையும் — என்றோ
பெற்றேதான் தீருமடா.

உம் இருவரையும் இழந்து — இன்றுடன்
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் கல்லறைகளுக்கு என்றும்
எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்.

"வேல்வாசம்"
நெடிய காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தவர்கள். [4557]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழையில் அமையும்

# விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் திறப்பு வைபவம் சிறப்பு இதழ்

## 29 — 06 — 1988

## யாழ் பிரதேசத்தில் விழிப்புலனற்றோரின் கல்வி நிலை

★ இலங்கையில், முதன்முதலாக – பார்வை இடையூறுடைய பிள்ளைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கல்விச்சேவை (விசேடகல்வி) 1969 இல் ஆரம்பிக்கப்பட்டது.

★ இச்சேவை, யாழ். மாவட்டத்தில் - சாவகச்சேரி றிபேக் கலலூரியில் முதன்முதலாக, 1972 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ இச்சேவையில் 1972இல் இருந்து – தமிழ்ப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஒரே ஒரு ஆசிரியை, செல்வி அ. சின்னத்தம்பி அவர்களே ஆவர்.

★ இச்சேவையினூடாகப் பயின்று பல்கலைக்கழகப் பட்டதாரியான முதல்மாணவி - பருத்தித்துறையைச் சேர்ந்த கலைமாணி (B.A) திருமதி மங்களராணி சுப்பிரமணியம் ஆவர். இவர் தற்போது, யாழ். கன்னியர் மடக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

★ அடுத்தவர்-சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நேசராஜ் உவாட்ஸ் வர்த் - இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் மிருதங்க இசை பயின்று முதற் பிரிவில் பட்டம் பெற்றவர். தற்போது இவர், மட்டக்களப்பு நுண்கலைக் கல்லூரியின் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.

★ இக்கல்விச்சேவையின் ஊடாக.இதுவரை

1. நால்வர்— பட்டதாரியாகியுள்ளார்கள்;
2. இருவர்— பட்டப்படிப்பின் இறுதிப் பரீட்சை எழுதியுள்ளார்கள்;
3. ஐவர்— பல்கலைக்கழகங்களிற் படித்துக் கொண்டிருக்கிறார்கள்;
4. இருவர்— க. பொ. த. (உயர்) வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்;
5. ஒன்பதுபேர் கீழ்வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களிற் சிலர் மன்னார், மட்டக்களப்பு, மாங்குளம் போன்ற வெளியூர்களைச் சேர்ந்தவர்கள்.

★ சாவகச்சேரி றிபேக், யாழ் இந்து, மருதனமடம் இராமநாதன், தெல்லிப்பழை யூனியன், வீமன்காமம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மட்டுமே இக்கல்விச் சேவை, இங்கு நடைபெறுகிறது.

★ கொடிகாமத்தைச் சேர்ந்த இருவர் (ஒருவர் வேம்பிராய், மற்றவர் மந்துவில்) க. பொ. த. (உயர்) வகுப்புவரை பயின்றும் வசதிக் குறைவால் தமது கல்வியைத் தொடரமுடியாது இருக்கின்றனர்.

★ பருத்தித்துறையைச் சேர்ந்த இருவர் (ஒருவர் அல்வாய்; மற்றவர் துன்னாலை) விசேட ஆசிரியையின் உதவியைப் பெற முடியாது க. பொ. த. (சா.) வகுப்பில் இருக்கிறார்கள்.

★ இவர்களை விட இன்றும் பலர் இப்பிரதேசத்தில் தகவலின்றி இருக்கிறார்கள்.

– தகவல் தொகுப்பு:
**"அநுராதன்"**

## யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் மகிழ்வும் நன்றியும்

விழிப்புலனற்றோரின் கல்வி முன்னேற்றத்தில் இவ்வாழ்வகம் புதியதொரு, நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதில் எதுவித ஐயமுமில்லை, குறுகிய காலத்துக்குள், இவ்வாழ்வகத்தை ஆரம்பிக்க முடிந்ததையிட்டு, இதன் தாபக நிறுவனம் என்ற வகையில் எமது சங்கம் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறது. அதேவேளை, இது தொடர்பாக எமக்கு அவ்வப்போது உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எதிர்காலத்திலும், இவ்வாழ்வகத்துக்குப் பொதுமக்களினதும் நலன்புரி நிறுவனங்களினதும் உதவிகளும், ஒத்துழைப்புகளும் கிடைக்குமென உறுதியாக நம்புகின்றோம்.

விழிப்புலனற்றோரின் கல்வி நிலையை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை தமக்கும், தாம் வாழும் சமூகத்துக்கும் பயனுள்ளவர்களாக ஆக்க இவ்வாழ்வகத்தின் பணிகள் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென, எமது சங்கத்தின் சார்பில் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

**ஆ. ரவீந்திரன்**
தலைவர்
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், கைதடி.

## விழிப்புல வலுவிழந்தாலும் மனவலு மிக்கோர்!

பிறவிகளில் தலையாயது, மனிதப் பிறவியாகும். மனிதப் பிறவி எடுத்த எவருக்கும் வாழ்வின் இனிமையையும், நன்மையையும் சமமாக அநுபவிக்கும் அடிப்படை உரிமை பரிபூரணமாக உண்டு. இக் கருத்தினை, உடலின் ஊனமொன்று பொய்யாக்க இடந்தராது. ஏனையோரைப் போல் உடலூனமுற்றோரும் வாழ்வின் வசந்தத்தை அநுபவிக்க உதவுதலே மன்தர்மமாகும்.

இச் சிறிய நோக்கினை அடித்தளமாகக் கொண்டு, தமிழ் பேசும் விழிப்புலன் வலுவிழந்தோருக்கு ஆதரவு நல்கி அவர்களை மேம்பாடடையச் செய்வதற்காக முதன்முதலாக ஆரம்பிக்கவிருக்கும் 'விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகத்துக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்புவதில் மகிழ்கிறேன்.

உடல் வலுவிழந்தோருக்கு, ஏனையோர் அளிக்கக் கூடிய ஒரேஒரு உயர்ந்த உதவி, அவர்கள் மனதில் தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களையும் சாதாரண மனிதர்களாக வாழ்வதற்குரிய மனப்பக்குவத்தினை ஏற்படுத்துதலாகும். நவீன விஞ்ஞான வசதிகளுடன் மக்களின் நல்லெண்ணமும் பரஸ்பர புரிந்துணர்வும் அன்பும் ஒன்றுசேரின் அது இயலாத ஒன்றல்ல-

விழிப்புல வலுவிழந்த போதிலும் தனது ஆத்மபலத்தால் 'மீண்ட சொர்க்கம்' என்ற அழியாக்காவியத்தை தந்த ஜோன்மில்டன் போன்று விழிபபு" வலுவிழந்தோரும் மனவலுவுடன் ஆத்மபலமும்பெறவேண்டும்.

இதற்காக நல்லெண்ணங்கொண்டவர்களால் ஆரம்பிக்கப்பட இருக்கும் வாழ்வகம் நலமுடன் விளங்க வேண்டும்' இவ் வாழ்வகம் அவர்களது முன்னேற்றப்பாதையின் ஒரு மைல் கல்லாக விளங்க எனது நல்லாசிகள் உரியவையாகும்

திருமதி. க. சிவசிதம்பரம்
சமூக சேவை உதவிப்
- பணிப்பாளர்
யாழ்ப்பணம்

## 'வாழ்வகம்' ஒரு முதற்படி

உடல் உறுப்புகளுள் முக்கியமானது, கண் 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்பர்.

கட்புலன் வாய்த்திருக்கும் நிலையில் அதன் அருமை நமக்குத் தெரிவதில்லை. இடையில், கண் பார்வை மங்கினலோ, முற்றாக இல்லாது போனாலோ உலகமே இருண்டு விடுகிறது.

"When I consider how my light is spent, Ere half my days in this dark world and wide"

என மில்றன் என்ற கவிஞன் வருந்தினான்.

வாழ் நாளில் அரைவாசி கழிந்த பின் கூட, கட்புலனை இழப்பது கொடிது என்றால்; பிறவிக் குருடர் நிலையைச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள், மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டியவர்களாகிறார்கள். உற்றார், உறவினர்களால் சுமைகளாகக் கருதப்படுகிறார்கள்.

விழிப்புலன் இழந்தோரை, மேலைநாடுகள் அநுதாபத்தோடு நடத்துகின்றன. அவர்கள் கல்விகற்க 'பிரைலி' முறை உதவுகிறது. படித்துப் பட்டம் பெற்று, வேலையும் செய்கிறார்கள் ஒன்றுபட்டு 'வெள்ளைப் பிரம்பு' இயக்கமாகச் செயற்படுகிறார்கள்.

நமது சமூகம் இன்னும் இந்தத் துறையில் செய்ய வேண்டியவை நிறைய வுண்டு.

'வாழ்வகம்' இதில் முதற்படி எனலாம். நம்மிடையே உள்ள விழிப்புலன் அற்றோருக்கு; வாழ்வில் இனி நிச்சயம் ஒளி பிறக்கும் என நம்பலாம்.

இந்த நல்ல பணியை மேற் கொண்டுள்ளோரைப் பாராட்டுகிறேன். 'வாழ்வகம்' வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

**ந. கனகேஸ்வரன்**
அதிபர்
பலாலி ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

வாழ்வகம் வளமுற
வாழ்த்துகிறோம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை.

## மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை

விழிப்புல வலுவிழந்தோருக்காக உத்தேசிக்கப்படும் வாழ்வகம். 29 – 6 – 88 இல் திறப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மானிடராகப் பிறந்தவர்கள் தம் வாழ்நாளில்மற்றவர்களுக்குச் சேவை செய்வதை உன்னத நோக்மாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதுவும் வலுவிழந்தோர்களுக்குச்செய்யும் சேவை ஆண்டவனால் கணிக்கப்பட்டு, செய்பவர்களுக்கு நற்பலனையும், நல்லாசியையும்பெற்றுக் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் வலுவிழந்தோர் வசிக்கிறார்கள். அவர்களை ஒருங்கு சேர்த்து ஓரிடத்தில் அமர்த்தி அவர்களுக்கு உயர்கல்வி அளிக்கும் நோக்கோடு இவ் வாழ்வகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் வாழ்வகத்தை அமைப்பதற்குபெரியார்கள் பலர் முன் வந்திருக்கிறார்கள். இவர்களின் தியாக மனப்பான்மையையும், தன்னலமற்ற சேவையையும்பாராட்டுகிறேன்.

இந் நிலையம், மென்மேலும் வளர்ந்து நற்பணியாற்ற வேண்டுமென இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

மக்கள் சேவையே
மகேஸ்வரன் சேவை

**வெ. சபாநாயகம்**
யாழ்.
கல்விப்பணிப்பாளர்,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

## விழிப்புலனற்றோருக்கு ஒரு வாழ்வகம்

"எங்கே குறைபாடு உண்டோ அங்கேதான் எமது சேவை இன்றி அமையாதது" என்றார் காந்தியடிகள்.

இதனை நினைந்து பணி புரிய முன்வந்துள்ள அற நிறுவனங்களை மனமார பாராட்டுகின்றேன்.

பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கான ஒரு முகப்படுத்தப்பட்ட கல்விச் சேவை தொடர்வதற்கு அவர்களுக்கென்று ஒரு வாழ்வகம் அமையவேண்டும். அவர்களை நாகரிகமான சமுதாயத்திலிருந்து ஒதுக்கி விடாமல் தலை நிமிர்ந்து நின்று வாழ்க்கையை நடத்தவும் தொழில் புரியவும் கூடிய கல்வி வாய்ப்பைப் பெற உயர்கல்லூரிகளில்இவர்கள் கல்வி பெறும்சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே மனிதாபி

(4 ஆம்பக்கம் பார்க்க)

## நம்பிக்கை ஒளிகொடுப்போம்

"அரிதுஅரிதுமானிடராகப்பிறத்தல்அரிது" என்கிறார் அருந்தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி. கட்புல, செவிப்புல குறைபாடின்றிப் பிறத்தல் அதனிலும் அரிது என்கிறார் அவர்.

அத்தகைய குறைபாட்டோடு பிறந்து விட்சோதரருக்கு நாம்மனிதநேயம் காட்டக் கடமைப்பட்டுள்ளோம். சமுதாயக் கதவுகள் அவர்களுக்காக மூடுபட்டு விடுமேயானால் நாம் மனிதத்துவத்தை மறந்தவராகி விடுவோம்.

"கண்ணெனத்தகும்" என்றும் "கண்ணை இமை காப்பது போல" என்றும் தமிழினம் உவமைகளைக் கையாளும் போது கண்ணுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்தே கையாண்டு வந்துள்ளது.

பார்வையிழந்து விட்டதால் வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகி விட்டது என்ற எண்ணம் விழிப்புலனிழந்த சகோதரர்களுக்கு ஏற்பட்டுவிடுமேயானால் தாம் இந்த உலகில் வாழத் தகுதியற்றவர்கள் என்ற உணர்வு அவர்களிடம் தோன்றி விடுமேயானால் விரக்தியின் விளிம்பிற்கு அவர்கள் சென்று விடுவார்கள்.

இந்த வையத்திலே அவர்களும் வாழப் பிறந்தவர்கள்.

சமுதாயத்தில் ஏனைய உறுப்பினர்களுக்கு எந்த வகையிலும் தாழ்விலா நிலையில் தக்கோராக வாழ வைக்கப்படவேண்டியவர்கள். அவ்வாறு வாழ வைக்கும் கடமையைஎமது சமுதாயம் அலட்சியம் செய்து விட முடியாது. எனவே சமுதாயம் அக்கடமையை நன்குணர்ந்து செயற்பட்டாகவேண்டும்.

விழிப்புலனிழந்தோர் மீதோ அன்றி வேறெவ் வகையில் ஊனமுற்றோர் மீதோ அனுதாபம் காட்டுவது என்பது அவர்களது தாழ்வுணர்ச்சியைத்தான் அதிகரிக்கச் செய்யும். அநுதாபத்துக்கும் மேலான தொன்றையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பினை நாம்நிறைவு செய்ய வேண்டும்.

சமுதாயம்அவர்களைத் தாழ்வாகக் கருதக் கூடாது என்பதான் முக்கியம். அனைத்து நிலையிலும் சமத்துவமானவர்களாக அவர்கள் எண்ணப்பட வேண்டும்.

அத்தகையநிலைக்குஅவர்களை முன்னேற்றிவைக்க நாம் முயன்றிட வேண்டும்.

எனவே விழிப்புலனிழந்தசோதரர்கு வழியினை

(4 ஆம் பக்கம் பார்க்க)



வாழ்வகத்தில் புதுவாழ்வு காணவிருக்கும் இளம் குருத்துக்கள்

## தமிழ்ப் பிரதேசத்துக்கு ஒரு வாழ்வகம்

இந் நாட்டில் குறிப்பாக-தமிழ்பேசும் விழிப்புல வலுவிழந்தோர் பலர் கல்வியறிவு–தொழில்வாய்ப்பு–பொருளாதார நிறைவு–சமூகக் கணிப்பு எதுவுமின்றி, மூலைக்கொருவராக முடங்கியும்-முடங்கப் பெற்றும் வாழ்கிறார்கள்.

இன்றைய கால கட்டத்தில், இவர்களும் எமது தமிழ்ச் சமூகத்தின் பங்காளிகள் என்ற வகையில் இவர்களுக்கான நல்வாழ்வும் - நல்வளமும் – நல்வாதரவும் நல்க வேண்டிய தலையாய சமூகப் பொறுப்பு தமிழ்பேசும் ஒவ்வொரு குடிமகனுக்கும் இன்றியமையாது உள்ளது.

இதன் பொருட்டு, சமூக நலனில் அக்கறையும் கரிசனையுங்கொண்ட சமூகத் தொண்டர் சிலர் கடந்த 05-06-88 இல், யாழ் இந்துக்கல்லூரியில் கூடினர். அப்பேராளர் கூட்டத்தில், "இலங்கையில் விழிப்புல வலுவிழந்திருக்கும் திருமணமாகாத (05–25 வயதுக்குட்பட்ட) ஆண், பெண் இருபாலாருக்குமான ஒரு வாழ்வகம் அமைக்க வேண்டும்" என்ற ஓர் ஆலோசனை முன் வைக்கப்பட்டது. அதன்பேரில் இவ்வாழ்வகம்-

★ பாகுபாடற்ற ஒரு நிறுவனமாகவும்,

★ இங்கு அனுமதி பெறுவோர் பார்வை இடையூறுடைய பிள்ளைகளுக்கான இலங்கை ஒரு முகப்படுத்தப்பட்ட கல்விச்சேவை (விசேட கல்வி) த் திட்டத்துக்கு ஊடாக, இயல்பாகவுள்ள அரசாங்க தனியார் கல்வி நிறுவனங்களிற் சேர்ந்து கல்வி பயில வசதி ஏற்படுத்தித் தரும் ஒரு நிலையமாகவும்;

★ இவர்களுக்கு உணவு-உடை-உறையுள் வசதிகள் தரும் ஒரு சாந்தி இல்லமாகவும்;

★ கலை, கலாச்சாரப் பண்பாட்டு நெறி, தொழிற் பயிற்சி நெறி ஒழுக்க நெறி என்பனவற்றோடு தன்னம்பிக்கை – தன்னூக்கம் - உயர்குணம் உற்சாகம் -விடாமுயற்சி எனும் நல்விழுமியங்களை இவர்களுக்கு நல்கும் ஒரு சாந்தி நிகேதனமாகவும் இலகுமைய ஆவன செய்யப்படும்.

இந்த அரு முயற்சியை யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் தம்முள் உரப்படுத்தி அதற்கான ஓர் இல்லத்தையும் எடுத்து ஆவன செய்ய முயன்றன.

அம்முயற்சியின் பயனாக உருப்பெறும் இவ் வாழ்வகம் மேற்குறித்து பேரவையிடம் ஒப்படைக்கப் பெறுகிறது.

இதன் திருவாகச் செயற்பாடுகளையும், ஆக்கப்பணிகளையும் இயக்குவதற்கு இப்பேரவையே ஓர் இயக்குநர் சபையைத் தெரிவு செய்திருக்கிறது.

அதன் முதல் நடவடிக்கையாக இவ் வாழ்வகம்

[4-ஆம் பக்கம் பார்க்க

**எழுதுபவர் அநு. வை. நாகராஜன்**
(டி வாழ்வக இயக்குநர் சபை இணைப்பாளர்)

வாழ்வகம் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறோம்...

லங்கா சிமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

நியூ லங்கா றேடர்ஸ்,
222, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

புனிதவளன் டிம்பர் டிப்போ,
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இவ்வார
வெளியீடுகள்

1. ஆம்பிளைச் சிங்கம்
2. தாலி பாக்கியம்
3. மணி ஓசை
4. பாபு
5. கொங்குநாட்டு தங்கம்

(அனைத்தும் ஒரிஜினல் பிரதிகள்)

குணம்
வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C5562)



வீட்டிற்கு வெளியே ஒரு வீடு!
ஸ்ரீ நாகை இன்

கொழும்பு செல்லும் உங்களிற்கு தனியாகவோ, குடும்பமாகவோ தங்க வேண்டுமாயின் குறைகள் ஏதும் இல்லாத நிறைவான சேவையில், குறைவான கட்டணத்தில் தங்குவதற்கு

ஸ்ரீ நாகை இன்

தங்குமிட வசதியுடன் வேண்டிய இடங்களிற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் வசதி, விரும்பும் இடங்களிற்கு செய்திகளை அனுப்பி தொடர்பு கொள்ள ரெலெக்ஸ் சேவை மற்றும் விமான நிலைய போக்கு வரத்து ஒழுங்குகளிற்கு

ஸ்ரீ நாகை இன்

கொழும்பில் இருந்து
யாழ் நகர் வருவோரிற்கு
சொகுசான பஸ் ஆசனப் பதிவுகளிற்கு

ஸ்ரீ நாகை இன்

கொழும்பு மாநகரில் சகல வசதிகளையும் ஒன்று சேர்த்து ஒரே இடத்தில் தங்குமிட வசதிக்கு எப்போதும் நாடுங்கள்:

SRI NAGAIH INN

ஸ்ரீ நாகை இன்

இல 176, சென்ரல் ரோட்,
கொழும்பு - 12

★ ஷன் அட்வடைசிங் சேவிஸ் ★
யாழ்ப்பாணம்.

(4767)



KUWAIT

VACANCIES

Wanted CLEANERS for Kuwait.
MALES: Age: 20 to 40
FEMALES: Age: 30 to 40
3 Years Contract.

GULF WINGS
23, Aloe Avenue
Colombo - 3.

Applications in Jaffna District may be handed over to

V. T. R. Travels
41, 3rd Cross Street,
Jaffna.

Approval No: AL 527 / 6 / 88

(4823)


## விழிப்பு.......

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மானம் படைத்தோரும் சமூக நலன்விரும்பிகளும் ஒன்றுபட்டு தெல்லிப்பழை பிரதான வீதியில் துர்க்காதேவி ஆலயத்துக்கு அணித்தாக இவ்வாழ்வகத்தை அமைத்துள்ளனர்.

இப்பணியில் முன்னின்று உதவும் விசேட ஆசிரியை செல்வி - சின்னத்தம்பிக்கு என் வாழ்த்துக் கூறி, மேலும் இப்புனிதமான கைங்கரியத்துக்கு ஆதரவு நல்கி நற்பயனடைய வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு புதிய வாழ்வகத்தைவாழ்த்திஅமைகின்றேன்.

தங்கம்மா
அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்கா
தேவஸ்தானம்
தெல்லிப்பழை

## தமிழ்ப்.....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இன்று (29-06-88)தெல்லிப்பழையில் தொடக்கி வைக்கப்படுகிறது. இங்கு முதற்கட்டமாக - பத்து விழிப்புல வலுவிழந்தோருக்கு ஏற்றவழி — வசதிகள்ஏற்படுத்திக் கொடுக்கப்படும். காலக் கிரமத்தில் இத்தொகை பெருக்கப்படும்.

இதற்கான பொருளுதவி – ஆளணி உதவி என்பனவற்றைத்தயாள சிந்தையும் - தாராள மனப்பான்மையும் உடைய பெருமக்களிடம் இவ் வாழ்வகம் எதிர்பார்க்கிறது.

இவ் வாழ்வகம், வாழ்வாங்கு வாழ நிதிபடைத்தோர் நிதியுதவி தந்து உதவலாம்; நிதியில்லாதோர் தம்மால் இயன்ற சரீரவுதவி தந்து உதவலாம்; அதுவும் இல்லாதோர் நல்வழி காட்டி நல்லாதரவு நல்கலாம்.

## நம்பிக்கை...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

காட்டுவோம் ஒளி மயமான எதிர்காலம் அவர்கள் முன்னே இருக்கிறது என்ற நம்பிக்கையை ஊட்டுவோம், அந்த நம்பிக்கைவெளியூட்டும்இல்லம் தான்விழிப்புலனிழந்தோர் வாழ்வகம்—அவர் தம் வாழ்க்கையை வளம் படுத்திட இவ் வாழ்வகம் வழிகாட்டட்டும், என வுரைத்து மனிதநேயம் மிக்க உன்னதமான இப்பணி சிறக்க வாழ்த்துகிறேன். இவர்களது வாழ்வு இவ்வுவாழ்வகத்தில் வளமுள்ளதாக அமைய வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்,

சி. சிவமகராசா
தவிசாளர்
டி வாழ்வக இயக்குநர் சபை.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



A. J. மரியநாயகம் விஜி யோகராணி

தோற்றம்: 22—9—1959 மறைவு: 29—6—1987

மண்ணில் நீங்கள் மறைந்தாலும்
கண்ணில் நீங்கள் நடமாடும்
காட்சி தான் மறந்திடுமோ
எண்ணமதில் என்றும் நீங்கள்
எங்களுடன் வாழ்கின்றீர்கள்

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களது நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது.

எம் கண்ணீரால் உம்பாதம் நனைத்துநிற்கும் அன்புக் கணவன், அன்புப் பெற்றோர், அன்புச் சகோதரர்கள், மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார், உறவினர்கள்.

No. 7/12, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

(4765)



I. E. T. Technical Institute

11, B, STANLEY ROAD, JAFFNA.

(லிடோ தியேட்டருக்கும் முட்டாசுக்கடை சந்திக்கும் இடையில்)

✶ எலக்ரிஷன் ✶ ஓட்டோ எலக்ரிஷன்
✶ வைண்டிங் ✶ மெக்கானிக்

பயிற்சியளிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்

முடிவு திகதி: 01 - 07 - 1988

(4764)



வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

B. A. 1988 டிசம்பர்

G. A. Q. 1989 ஏப்ரல்

பொருளியல்

S. வரதராஜன் B. A. (Hons)

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

3-7-88 ஞாயிறு
B.A. வகுப்பு 8-00 A. M.
G.A.Q. வகுப்பு 3-00 P. M.

★ கடந்த 10 வருட பரீட்சைகளின் வினா - விடை வகுப்பும் இதனோடு இணைந்து நடைபெறும்.

குறிப்பு:- அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் 3-7-88க்கு முன்னர் தமது பெயர்களைப் பதிவு செய்யவும். இத்திகதிக்குப் பின்னர் வகுப்பிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர்களின் வசதிக்கேற்ப நேரங்கள் தீர்மானிக்கப்படுமாதலால் முதலாவது வகுப்பிற்கு மாணவர்கள் அனைவரும் கட்டாயம் சமூகமளித்தல் வேண்டும்.

BECON கல்வி நிலையம் (அருகாமை)
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 5554)


## கிணற்றில் விழுந்து மரணம்

மதிய உணவுக்காகத் தண்ணீர் அள்ளச்சென்றபோது மாணவன் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆறும் ஆண்டில் கல்வி கற்கும் பாலசிங்கம் - சோபிதன் (11 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.


31 ஆம் நாள் நினைவஞ்சலி



R. ராஜ்குமார்
(ராஜன் - அப்பன் அண்ணா)

தோற்றம் 17- 04- 1971 அகால மறைவு 29- 05- 1988

உயர் குலத்து உத்தமச் செம்மலே
மாறாத அன்பினால் எல்லோரையும்
மகிழவைத்த எம் தெய்வமே,
தீராத துயருடனே எல்லோரையும்
வாடவைத்து
மீளாத் துயில் கொண்டு
ஆறுதல் அடைய காலன்
கையில் சரண் அடைந்தீரோ.
உம் பிரிவால் வாடும்
தாய் - தகப்பன்
அண்ணன்மார் - அக்கா
தங்கை - மருமக்கள்மார்

நாவற்குழி

(4564)



கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டுள்ளது)

1. வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 10,000 வரை வெற்றுச் சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு.
விண்ணப்ப முடிவு திகதி: 15. 07. 1988
விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 14. 07. 88 வரை பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்பப் பத்திரம் ரூபா 10 / செலுத்தி சங்கச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மீளளிப்பு வைப்புப் பணம் ரூபா 300/ ஆகும்.

2. இரூசு லொறி பழைய உதிரிப்பாக விற்பனை

இரூசு லொறி பழைய உதிரிப்பாகங்கள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு.
14. 07. 1988 வரை உதிரிப்பாகங்களை காரியாலயத்தில் நேரில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

(C/5569)



லான்ட் மாஸ்டர்
உழவுயந்திர உரிமையாளர்களுக்கு
ஓர் நற்செய்தி!

500 x 12 அளவு ரயர்கள்
எமது தொழிற்சாலையில்
நிரப்பப்படுகின்றன



உங்கள் தேய்ந்த ரயர்களை
மீள நிரப்பத்
தொடர்பு கொள்ளுங்கள்:

நோர்தேண்
இன்டஸ்றீஸ்

தொழிற்சாலை: 69, பிரவுண் வீதி, கொக்குவில்.
காட்சி அறை: 112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4313)



புதிய உயர் கல்லூரி

A/L 89 1 வருட வகுப்புகள்

ஆரம்பம்: 2-7-88 காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| வர்த்தகம் | — | தேவா |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| புவியியல் | — | குணராசா |
| அரசியல் | — | குமார் |

பிறிட்டே English 2ஆம் பிரிவு
(ஆரம்பம்: 2. 7. 88)

விபரங்களுக்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-5572)



குவைத்
வேலைவாய்ப்பு

கிளீனர்ஸ்
வயது எல்லை 20 — 40 35 KD
பணிப்பெண்கள்
வயது எல்லை 30 — 40 30 KD

கல்ப் விங்ஸ்
23, அலோய் அவெனியு,
கொழும்பு—3.

எமது வடமாகாண முகவர்
V. T. R. ரவல்ஸ்
இல. 41 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
அ. இ-527/6/88

(4822)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து

**பொருள்:**

வல்லமை அமைந்த பெரியாரிடத்தில் (மற்றொருவன்) செவியை நெருங்கிச் சொல்லுதலும் உடன்சேர்ந்து நகைத்தலும் செய்யாமல் ஒழுகவேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
29-06-1988 த. பெ. இல. 23


## வாழ்விக்க ஒரு வாழ்வகம்

தெல்லிப்பழையில், விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் இன்று திறந்து வைக்கப்படுகிறது. தமிழ்ப்பகுதியின் நீண்ட நாள் தேவை ஒன்று அதன் மூலம் நிறைவேறுகிறது.

விழிப்புலனை இழந்தது பெரும் துரதிர்ஷ்டம்; அதனால் வாழ்க்கை இருண்டு விட்டது; இவ்வாறு சம்பந்தப்பட்டவர்கள் நினைக்க இடம்கொடாது, ஏனையவர்களைப் போலவே அவர்களும் உயர்கல்வி வசதியும் பெற்று, தொழில் வாய்ப்பும் பெற்று சிரமச் சிறப்பாக வாழ வழி செய்யவும், மன வலிமையைத் தரவும் ஒரு வாழ்வகம் ஆரம்பிக்கப்படுகிறது. இது சமூக நலனில் அக்கறையுள்ள, மனித நேயம் கொண்ட அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

அரிது அரிது மானிடராதல். அதனிலும் அரிது புலன் இழக்காது பிறத்தல். ஆனால் புலன் இழந்து பிறந்து விட்டதற்காக எவரும் சாதாரண மனித வாழ்க்கையை வாழ்வதிலிருந்து ஒதுக்கப்பட வேண்டும் என்பதல்ல.

விழிப்புலனை மட்டுமன்றி ஏனைய புலன்களை இழந்தவர்கள் தானும். அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அவர்கள் அறிவினில் குறைந்தவர்கள் அல்லர்; ஆற்றலில் குறைந்தவர்கள் அல்லர்; மனித வாழ்க்கையை நடத்த தகுதி இழந்தவர்கள் அல்லர். இந்த மனத்தைரியம் அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும்.

அந்த மனத்தைரியமும், மனப்பக்குவமும் அவர்களுக்கு ஏற்படுவதற்கு சமூகத்திலுள்ள ஏனையோரின் மனிதநேயமும், அன்பும், ஆதரவும் அவசியம். புலன் வலுவிழந்தவர்கள் சாதாரண சமூக நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்; அந்த நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்குக் கைதூக்கிவிடப் படவேண்டியவர்கள். இந்த நல்லிதயம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். அவர்களுக்கு உதவுவது கடவுளுக்குத் தொண்டு செய்வதற்குச் சமன் என்ற புரிந்துணர்வு ஏனையோர் உள்ளங்களில் வளர்ந்து கொள்வதும் அவசியம்.

மேலே கூறப்பட்ட மனித நேயமும் அன்பும், ஆதரவும் சேவை மனப்பாங்கும் கொண்ட அன்பர்களின் நன்முயற்சியினால் வாழ்வகம் இன்று மலர்வது ஏனையோருக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும்.

விழிப்புல வலுவிழந்தோர் ஆரம்பக் கல்வி வரை தான் படிக்கலாம் என்ற நிலையைநீக்கி, உயர் கல்வியும் பெறமுடியும் என்ற புதிய நிலையைத் தமிழ் மக்கள் மத்தியில் வாழ்வகம் ஏற்படுத்த உள்ளது. விழிப்புலன் இழந்தோருக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வி வசதியை வழங்கி அவர்களும் வையத்தில் வளமாக வாழ வழி செய்யயும் புதிய பணியில் — புரட்சிப் பணியில் — அது ஈடுபட உள்ளது.

தமிழ்ப் பகுதியில், விழிப்புலன் இழந்தவர்களில் நான்கு பேர் மட்டுந்தான் பட்டதாரியானோர்கள்: இரண்டு பேர் மட்டுந்தான் உயர் கல்விபெற்றுத் தொழில் புரிகிறார்கள் என்ற நிலை மாறி நூற்றுக்கணக்கானோர், ஆயிரக் கணக்கானோர் அந்த வரிசையில் சேர வேண்டும் என்ற இலட்சியத்துடன் இந்த வாழ்வகம் திறக்கப்படுகிறது. அந்த இலட்சியம் இடையூறு எதுவுமின்றி நிறைவேறி எண்ணற்றோருக்கு வளமாக வாழ்வு தர வேண்டும்.

இந்த நன்முயற்சியில் முன்னின்று உழைக்கும் அன்பர்களுக்கு எல்லோரும் உதவ வேண்டும்.

புலனிழந்தோர், ஊனமுற்றோர் ஆகிய சகல தரப்பாரும் சமூகத்தில் தலைநிமிர்ந்து, குறைவில்லா வாழ்வு வாழ்வதற்கு உதவ வேண்டியது சமூகமே. அதனைக் கருத்தில் இருத்திச் செயற்பட எல்லோரும் முன்வருவோமாக.

## ஜெய்ப்பூர் செயற்கைக்கால் ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 29

யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் தொழிற்சாலையின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் உள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலை அலுவலகத்தில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளில் பிரதமவிருந்தினராக சமூக சேவைத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் [illegible] சிதம்பரமும் சிறப்பு விருந்தினராக கொழும்பு நட்புறவுச் சங்கத் திட்டமுகாமையாளர் திருமதி சுவர்ணா படினன்டும் கலந்து கொள்வார்கள்.

காலை நிகழ்ச்சிகளில், கருத்தரங்கும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பாவனையாளர்களுக்கு சங்கம் அமைத்தலும், முக்கிய நிகழ்சிகளாக இடம் பெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிக்கு உதவி அரசாங்க அதிபர் திரு [illegible] பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-5)

ஆஸ்திரியாவில்

# பாப்பரசரைக் கொல்ல முயற்சி
## வியன்னா பொலீஸார் முறியடிப்பு

வியன்னா, ஜூன் 28

பரிசுத்த பாப்பரசரைக் கொல்ல எடுக்கப்பட்ட முயற்சியை ஆஸ்திரியாவின் பாதுகாப்புப் படைகள் முறியடித்தன என்று அறிவிக்கப்படுகின்றது.

பாப்பரசரின் ஆஸ்திரிய விஜயம் [illegible] முடிந்தது.

அவரின் இறுதி நாள் விஜயத்தின் போது அவரைக் கொல்ல முயற்சிக்கப்பட்டது.

இரு துருக்கியப் பிரசைகள் கொலை முயற்சியை மேற்கொள்ளுவதற்காக வியன்னாவில் உள்ள பெரிய தேவாலயம் ஒன்றில் ஒழிந்து கொள்ள முயற்சித்தனர். பாதுகாப்புப்படையினர் அந்த இரண்டு பேரையும் கைது செய்தனர். அந்தத் தேவாலயத்துக்கு பாப்பரசர் பின்னர் விஜயம் செய்தார்.

1981 இலும் துருக்கிப் பிரசை ஒருவர் பாப்பரசரைக் கொல்ல முயற்சித்ததும் அதற்காக இப்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (எ)

### ஆர்ப்பாட்டம்

மாஸ்கோ, ஜூன் 28

சோவியத் யூனியனில் நாகர்னோ கராபாக் மாநிலத்தில் வாழும் டாட்டர் இன மக்கள் தாயகம் கோரி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

### ஒட்டேகா கியூபா விஜயம்

ஹவானா, ஜூன் 28

நிக்கரகுவா அதிபர் டானியல் ஒட்டேகா கியூபாவுக்கு விஜயம் செய்தார்.

சர்வதேச விமான நிலையத்தில் அதிபர் காஸ்ட்ரோ, ஜெனரல் ஒட்டேகாவை வரவேற்றார். 21 குண்டு மரியாதையும் அளிக்கப்பட்டது.

நிக்கரகுவா மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு முழு ஆதரவளித்து வரும் நாடுகளில் ஒன்று கியூபாவும் ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளி உலகில்

## பிரி. ராணுவத்தினர் நடத்தை குறித்து சபை கண்டனம்

லண்டன் ஜூன் 28

வட அயர்லந்தில் பிரிட்டிஷ் இராணுவம் செயற்படும் விதம் குறித்துச் சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐரிஷ் விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வது, விசாரணைசெய்வது [illegible] விஷயங்களில் மனித உரிமைகளை மீறி பிரிட்டிஷ் இராணுவம் நடந்துகொள்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### சீனவிலும்

சீனவில் யாங்ளி கிராமத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 14 பேர் உயிரிழந்தனர்; 7பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

மேலும் 30 பேருக்கு மேல் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடை மழை காரணமாக ஏற்பட்ட இம்மண் சரிவில் பல வீடுகள் சேதமடைந்தன. (ஒ-எ)

## சோவியத் - கனடா தகராறு தீர்ந்தது

ஒட்டாவா, ஜூன் 28

கனடா, சோவியத் யூனியன் நாடுகளுக்கு இடையேயான ராஜதந்திரத் தகராறுக்கு தீர்வு காணப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கனடா வெளியுறவு அமைச்சர் ஜோகிளார்க் இத்தகவலை வெளியிட்டார்.

கனடாவுக்கான சோவியத் தூதருடன் திரு. கிளார்க் 30 நிமிடங்கள் பேசினர். அதன் பின்னர் முன் கண்ட அறிவிப்பை வெளியிட்டார். (எ)

## நியூகலிடோனியாவில் பிராந்திய சுயாட்சி

நியூகலிடோனியாவில் வசிக்கும் கனக்ஸ் பழங்குடிமக்களுக்கு சுயாட்சி வழங்கும் திட்டம் ஒன்றை பிரெஞ்சு அரசு தயாரித்துள்ளது.

இதனை கனக்ஸ் போராளிகள் விடுதலை முன்னணியும் ஏற்றுள்ளது.

புதிய உடன்பட்டின் படி, நியூகலிடோனியா மூன்று பிராந்தியங்களாகப் பிரிக்கப்படும். தலைநகரான நௌமியுடனான பிராந்தியத்தில் பிரெஞ்சுப் பிரசைகள் பெரும்பான்மையினராக இருப்பர்.

ஏனைய இரண்டு பிராந்தியங்களிலும் கனக்ஸ் இன மக்கள் பெரும்பான்மையினராக இருப்பர்.

இப்பிராந்தியங்களுக்கு சுயாட்சி வழங்கப்படும்.

பிரெஞ்சு அரசின் கீழ் தொடர்ந்தும் சமஷ்டி அமைப்பின் கீழ் இயங்குவதா? இல்லையா? சுதந்திர நடாக மாறுவதா? என்பதை நிர்ணயிக்கும் சர்வசன வாக்கெடுப்பு 1998 இல் நடத்தப்படும் என்று உடன் பாட்டில் கூறப்பட்டுள்ளது. (எ)

# இரண்டு ரயில்கள் மோதின; 40 பேர் பலி; பலர் காயம்

பாரிஸ், ஜூன் 28

பாரிஸ் ரயில் நிலையத்தில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் 40 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

68 கிலோ மீட்டர் வேகத்தில் வந்த ரயில் ஒன்று, புறப்படுவதற்காக நின்றுகொண்டு இருந்த ரயிலுடன் மோதியது.

பிரேக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ் விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

40 பேர் வரையில் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

இராணுவ நிர்ப் ந்தங்களின் கீழ்

# தேர்தலை நடத்த முயல்வது நிலைமையை மேலும்மோசமாக்கும்

## இடது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 29

இன்றைய சூழலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த நிறுத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து முத்தரப்புப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து அரசியல்இணக்கம் ஒன்று காணப்பட வேண்டும். இதனை விடுத்து ராணுவ நிர்ப்பந்தங்களின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசு முற்படுவது நிலைமை மேலும் மோசமடையவே வழிவகுக்கும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்தியகுழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுத் தேர்தல் ஒன்றைத் தட்டிக்கழித்துக் காலத்தைக்கடத்திவரும் யூ. என். பி. அரசு தனக்குச் சாதகமான தேர்தல்களை நடத்தி தான் பலத்துடன் இருப்பதாகக் காட்டிக் கொள்ள முற்பட்டுள்ளது.

வடக்கிலும்கிழக்கிலும் தனது செயற்பாடுகளால் அமைதியைக் கொண்டு வந்து விட்டதாகக் காட்டிக் கொள்ளவே மாகாணசபைத் தேர்தலை அடுத்த மாதத்தில் நடத்த முயற்சிகளைமேற்கொள்கின்றது.

தேர்தல் என்பது ஜனநாயக நடைமுறையின் ஓர் அம்சமாக நடைபெறவேண்டுமே அன்றி வலுக்கட்டாயமான ராணுவ நிர்ப்பந்தங்களின் மூலம் நடத்தப்படமுடியாத ஒன்றாகும்.

சமாதான ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவற்றிலும் அதற்கு அப்பாலும் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. அவற்றின் நிதான கருத்து வேறுபாடுகளும் நிலவுகின்றன.

தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை, சிங்களக் குடியேற்றம், இடம் பெயர்ந்தோரின் மறுவாழ்வு, சிவில் நிருவாக நடைமுறை, பேச்சு-எழுத்து உட்பட ஜனநாயக உரிமைகள் போன்ற பிரச்சினைகளில் தீர்வு எய்தப்படவில்லை.

இவற்றுக்கும் மேலால் சுற்றிவளைப்பு, தேடுதல், கைதுசெய்து தடுத்து வைத்திருத்தல் போன்றவை நடை பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

சுருங்கக்கூறின், வடக்கு கிழக்கில் யுத்த சூழலும், பதற்றமும் பீதியும் நிலவுகின்றன.

இவை எல்லாம் இப்படியே இருக்க அவற்றுக்கு இணக்கமான அரசியல் தீர்வு காணப்படாது தேர்தல் நடத்துவது என்பது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கமுடியும்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தை இந்தியப் படைகள் உடனடியாக ஏற்படுத்தி எமது கட்சி ஏற்கனவே வலியுறுத்தி வந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையைத் தாமதமின்றி நடத்த வேண்டும்.

அதன் அடிப்படையில் ஓர் இடைக்கால நிருவாகத்தை ஏற்படுத்தி வடக்குக் கிழக்கில் அமைதியும் புனர்வாழ்வும் நடைமுறைப் படுத்தப்படும். புதிய சூழல் ஒன்றிலேயே மாகாணசபைத் தேர்தல் நடத்தப் படவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தெல்லிப்பழையில் இசையருவி

யாழ்ப்பாணம் ஜூன் 29

தெல்லிப்பழை கலை இலக்கியக்கழகத்தினரின் பதினொன்றாவது ஒன்றுகூடல் "இசையருவி" இன்று புதன்கிழமை பிற்பகல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

சங்கீத பூஷணம் திருமதி த. சிதம்பரநாதன் தலைமை வகிப்பார்.

பாட்டு: சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கம் வயலின்: சங்கீத வித்வான் வி. விநாயகமூர்த்தி.

[illegible] மிருதங்கம்: [illegible] முகர்சிங்: எஸ்ராஜா. (இ-எ)

## சண்டிலிப்பாயில் தேடுதல்

பண்டத்தரிப்பு ஜூன் 29

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி பிரதேசங்களை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய அமைதிப் படையினர், கைது செய்தவர்களில் 7 பேரைத் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை விடுதலை செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தலையாட்டிகள் சகிதம் நடந்த இந்தத் தேடுதலில் சண்டிலிப்பாய் [illegible] உதயகுமார் என்னும் மாணவனும் தடுத்து வைக்கப்பட்டவருள் ஒருவர். (ஒ-120)

## பிரெஞ்சு டாக்டர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூன் 29

யாழ் பிரெஞ்சு நட்புறவுப் பிரெஞ்மொழி பயிலும் மாணவர் அவை, மந்திகை ஆஸ்பத்திரியில் டாக்டர்களாக கடமையாற்றும் பிரெஞ்சு வைத்திய குழுவுடன் சிநேகபூர்வமென்பந்துஆட்டம் ஒன்றையும் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளது.

[illegible] இடம்பெறும் [illegible] மந்திகையில் நடைபெறும். (அ-சி)

சமய சந்நிதிகளில்

### மஞ்சத் திருவிழா

இணுவில் ஜூன் 29

இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சத் திருவிழா நாளை 30ஆம்திகதி வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

12ஆம் திருவிழாவான அன்று 2 மணிக்கு சண்முகா அர்ச்சனை ஆரம்பமாகும். 3 மணிக்கு மூர்த்தி மஞ்சத்தில் வீதியுலா வந்து அருள்பாலிப்பார்கள். (இ-சி)

## இன்னிசை கச்சேரி

யாழ்ப்பாணம் ஜூன் 29

நல்லைநகர் திருஞானசம்பந்தர் ஆதீனமும் யாழ் அண்ணமலை இசைத் தமிழ் மன்றமும் இணைந்து நடாத்தும் மூன்றுவது இசை அரங்கு நிகழ்ச்சியில் இசைவாணி திருமதி நாகேஸ்வரி பிரம்மானந்தா அவர்களது இன்னிசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை 5. 30 மணியளவில் நல்லை ஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு பக்கவாத்தியங்களாக சங்கீத வித்துவான் செல்வி. பாக்கியலட்சுமி நடராஜா வயலினும், சங்கீத ரத்தினம் எஸ். மகேந்திரன் மிருதங்கமும், செல்வன் க. கண்ணதாசன் கடமும், செல்வன் எஸ். துரைராஜா கஞ்சிராவும் இசைப்பர். (இ-5)

## கிராமசேவகர் கைது

மட்டக்களப்பு ஜூன் 29

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக் கிடைத்த தகவலை அடுத்து, அமைதிப் படையினர் திரவெளி கிராமசேவை அலுவலர் திரு க. உதயகுமார் என்பவரைக் கைது செய்துள்ளனர். (ஒ-21)

## மரக்கறிச் சந்தை புல்டோஸர் மூலம் துப்புரவு செய்ய படுகிறது

திருகோணமலை, ஜூன் 29

திருமலை நகர சபையின் மரக்கறிச் சந்தைப் பகுதி இந்திய அமைதிகாக்கும் படையினரின் புல்டோஸர் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

அத்துமீறிப் போடப்பட்டிருந்த கொட்டகைகள் யாவும் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

சந்தைப் பகுதியைச் சுற்றிவர மதில் கட்டப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மத்தியவீதி, டொக்யாட் வீதி, மெயின் வீதி ஆகிய வீதிகளில் ஒவ்வொரு வாசல் வைக்கப்படும் என்றும் மரக்கறிச்சந்தை மாலையில் பூட்டப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

நடைபாதையில் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் இந்த சந்தைப் பகுதிக்குள்ளேயே வியாபாரம் செய்யவேண்டிவரும்.

இங்கு 63 கடைகள் இருக்கின்றன.

இவற்றில் 35 கடைகளை தமிழருக்கும், 7 கடைகளை முஸ்லிம்களுக்கும், 21 கடைகளை சிங்களவருக்கும் வழங்க நகரசபை தீர்மானித்துள்ளது.

எனினும் தமிழ் வியாபாரிகள் அங்கு செல்வதற்கு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். (இ-150)

## தரிப்பு மண்டப வேலை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயச் சித்திரத் தேருக்கு தரிப்பு மண்டபம் நிறுவும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

அசம்பாவிதங்கள் காரணமாக இத் திருப்பணி தடைப்பட்டிருந்தது.

திருப்பணிக்கு உதவ விரும்புவோர் ஆலய பரிபாலன சபைக் [illegible] டன் தொடர்பு கொள்ளலாம் என்று பரிபாலன சபை அறிவித்துள்ளது. (இ-ா)

## ஈ.என்.டி.எல்.எப். சிரமதானம்

கிளிநொச்சி ஜூன் 29

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை முன்பாக [illegible] மதில் [illegible] ஈ.என்.டி.எல் எப் இயக்க வாலிபர் [illegible] உதவியுடன் துரித கதியில் நடைபெறுகின்றன.

கடந்த பல மாதங்களாக மந்தகதியில்இருந்த இவ் வேலைகளை இந்த இயக்க வாலிபர்கள் சிரமதானம் மூலம் நிறைவேற்றி வருகின்றனர். (இ-76)

## ஆலயமணி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஜூன் 29

''ஆலயமணி'' சஞ்சிகை வெளியீட்டுவிழா நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் இந்த விழாவுக்கு பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார்.

சஞ்சிகையின் முதற் பிரதியை யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம் பெறுவார். சஞ்சிகையின் முதற் பிரதியை 14 பெண்மணிகள் பெற்றுக் கொள்வர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், பேராசிரியர் கா. கைலாச நாதக் குருக்கள், சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உதயன்

29 - 06 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# இன்று மெதடிஸ்த தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இன்று மெதடிஸ்த தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1814 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி ஈழமண்ணில் மெதடிஸ்த திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.

இன்று 150 ஆவது வருடாந்த தினத்தைக் கொண்டாடும் வேம்படி மகளிர் பாடசாலையை உருவாக்கி 122 வருட காலமாக வளர்த்து பராமரித்து அதை இலங்கைப் பாடசாலையாக உயர்த்திய பெருமை மெதடிஸ்த திருச்சபையை [illegible] மற்றும் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ் மத்திய கல்லூரி ஆகியவையும் மெதடிஸ்த திருச்சபையால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளே.

யாழ். மெதடிஸ்த திருச்சபையினர் இன்று அச்செழுவில் மெதடிஸ்த தினம் தொடர்பான கொண்டாட்டங்களை நடத்துகின்றனர். (இ)

## மரணமானார்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மினிபஸ்ஸில் மோதுண்ட வயோதிபர் ஒருவர் நேற்று மரணமானார்.

கடந்த 26ஆம் திகதி ஆஸ்பத்திரி வீதியில் இவர் விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சுப்பிரமணியம் குமாரசாமி என்பவரே நேற்று மரணமானவராவர். (ஒ-10)

## அற்புத இரவு

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலை 5.00 மணிக்கு நடைபெறவிருக்கும் கூட்டங்களுக்கு உங்களை அழைக்கின்றோம்.

பாவம், பயம், தீராதவியாதி, அசுத்த ஆவி மற்றும் பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெற ஜெபம் ஏறெடுக்கப்படும்.

அசெம்பிளி ஒப் (f) கோட்,
14, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

(4378)

யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.

## படவரைஞர் பாடநெறி - 1988 [Draughtsman Course]

கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1988-07-06 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் முடிவு திகதிக்கு முன் அதிபருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கட்கு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளரால் 1988-06-13 ஆம் திகதிய "உதயன் நாளிதழில்" வெளியிடப்பட்ட விளம்பரத்தைப் பார்க்கவும்.

அதிபர்.
யாழ்ற்றன் கல்லூரி,
28. 6. 88. காரைநகர்.

(4772)

## யாழ் மத்திய கல்லூரி
வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்:- 30-06-1988 வியாழக்கிழமை பி. ப. 2 மணி

இடம்:- யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம்.

பிரதம விருந்தினர்:
திரு. எஸ். சோதிராஜா.
(றெட்பானா இணைப்பு அதிகாரி)

பரிசில் வழங்குவோர்:
திருமதி. ராதா சோதிராஜா

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.
(C/5571)

# உள்ளூராட்சி ஊழியருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்

## வருடாந்தக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 29

கடந்தகால வன்செயல்களால் பாதிக்கப்பட்ட சகல உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

ஐக்கிய உள்ளூராட்சி ஊழியர் சங்கத்தின் இரண்டாவதுவருடாந்த பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

★ சகல தற்காலிக ஊழியர்களும் நிரந்தரமாக்கப்பட வேண்டும். இவர்கள் சேவையில் இருக்கத்தக்கதாக புதியவர்களுக்கு நியமனம் வழங்கப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

★ உள்ளூராட்சி சேவை அல்லாத ஊழியர்களை மேலும் எதுவித தாமதமும் இன்றி உள்ளூராட்சி சேவையில் சேர்க்கப்பட வேண்டும்.

★ உள்ளூராட்சி பகுதிகளில் வெற்றிடங்களுக்கு வெளியாரை நியமிக்க முன்பு அங்கு கடமைபுரியும் தகுதியுள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

★ 1987இல் சீருடை வழங்கப்படாத சகல அங்கத்தவர்களுக்கும் தாமதமின்றி சீருடை வழங்கப்பட வேண்டும்.

★ சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவது வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே இது நிறுத்தப்பட்டு வேலையற்று இருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

★ 1986ஆம் ஆண்டு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பயணப்படியாகிய ரூபா 60 நிலுவைகளுடன் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் உடனடியாக யுத்தநிறுத்தம் அமுலுக்கு கொண்டுவரப்படவேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். (இ)

## நூல் அரங்கேற்றம்

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகரின் 'நகுலேஸ்வரர் திருப்பதிகம்' எனும் நூல் அரங்கேற்றம் இன்று புதன் காலை 8.30க்கு கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் பண்டிதர் மு. கந்தையா தலைமையில் நடைபெறும்.

விழாவில் திருவாளர்கள் க. உமாமகேஸ்வரன், ச. விநாயகமூர்த்தி பண்டிதர் சி. அப்புத்துரை ஆகியோர் உரையாற்றுவர்.

'பண்ணிசை மணி' இ. நமசிவாயம் திரு. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் திருப்பதிகம் இசைப்பர். (ஒ)

## 2 நாட்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சாவி, கிக்கெல்லை, தெவிநுவரை ஆகிய இடங்களில் கடந்த தினங்கள் முதல் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் ஆளும் கட்சியின் ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## இந்திய...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காட்டினார்; பட்டும் படாமலும்விஷயங்களைக் கலந்துரையாடினார்.

உடனடியாக எதுவும் நடந்துவிடும் என்பதற்கான அறிகுறியை அவரது கலந்துரையாடலில் இருந்து ஊகிக்க முடியவில்லை என்று பிரமுகர்கள் வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

ராஜீவ் தமது முக்கிய மூன்று மந்திரிகளுடன் திங்களன்று நடத்திய மந்திராலோசனையைத் தொடர்ந்து — விடு[illegible] புலிகள் — இந்திய அரசு பேச்சுக்களில் சிறுபின்னல்களுக்கு நேர்ந்திருப்பதாகச் சில வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

இதேவேளை பேச்சுவார்த்தைகள் குறித்து முக்கிய அறிவிப்பு விரைவில் வெளிவரலாம் என்ற நம்பிக்கையை அரசியல் வட்டாரங்கள் இன்னும் இழக்கவில்லை.

பேச்சுக்களின் விபரங்களை வெளியிடுவதற்குக் கால எல்லை (Embargo) ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (அ-க)

## பல்லாயிரம் பக்தர்கள்...

...டிருந்தது.

அடியார்கள் கோவிலுக்கு வருவதற்கெனப் பல இடங்களில் இருந்தும் பஸ்சேவைகள் குறிகாட்டுவான்வரை ஏற்பாடாகி இருந்தன.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் மிகநீண்ட வரிசையில் பக்தர்கள் படகுகளைத் தரிப்பதற்கு ஆவலுடன் அதிகாலையில் [illegible] நின்றதைக் காண முடிந்தது.

மேற்படி இறங்கு துறையில் இருந்துகோயிலுக்கு விசேட படகு சேவைகள் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் இருந்தன.

இரண்டு இறங்கு துறைகள், ஆலயச் சுற்றுடல் என்பனவற்றில் அமைதிப் படையினர், சென். ஜோன்ஸ் முதலுதவிப்படை உறுப்பினர்கள், சாரணர்கள், மற்றும் தொண்டர்கள் போக்குவரத்து, மற்றும் மக்களைக் கட்டுப்படுத்தும் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர்.

### உதவினர்

அமைதிப் படையினர் அங்கு நின்றபோதிலும் எதுவித சோதனைகளும் இடம்பெறவில்லை. பக்தர்களுடன் வெகு கண்ணியமாகவும், அன்னியோன்யமாகவும் நடந்துகொண்டனர். கடமையில் ஈடுபட்டிருந்த அமைதிப்படை ஜவான்களில் பலர் தமிழில் உரையாடினார்கள்.

வயோதிபர்கள் படகில் ஏறி, இறங்கும் போது படையினர் அவர்களுக்கு உதவியதையும் காணக்கூடியதாக இருந்தது.

கடல்போல் திரண்டிருந்த அடியார்களின் 'அரோகரா' ஒலியுடன் அம்பாளின் ரதம் காலை 10-20க்கு இருப்பிடத்தை விட்டு நகர்ந்தது.

கடந்த ஐந்து வருடங்களின் பின்னர் இன்று தான் இந்தக் கோயில் களைக் கட்டியிருப்பதாகவும்—

எனினும் 1976 ஆம் ஆண்டிற்குப் பின் பெரும் எண்ணிக்கையான பக்தர் கூட்டம் கூடியிருப்பது இதுவே முதற்தடவை எனவும் மேற்படி கோவிலின் அறங்காவலர்சபை உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கோவிலுக்குச் செல்லும் வீதிகளெங்கும் பந்தல்கள் அமைத்துத் தாகசாந்தியும் செய்யப்பட்டது. (ஒ- )

## யாழ் வேம்படி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ணிகளையான மாணவிகளும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் முடிந்து பிரம்மஸ்ரீ கிருஷ்ணய்யர் சாஸ்திரிகள் பிரசங்கையில் கூறியதாவது:-

இந்துமதம் பல கேள்விகளுக்கும் பதிலளிக்கிறது. யாகபூசைகளின் போது வெளியேறும் புகையானது பாடசாலைக் கட்டடங்களிலும் ஆசிரியைகள் மாணவிகளிலும் பரவி சாந்தியை உண்டாக்குகிறது.

வில்வ துளசி இலைகளைக் கொண்டு பூசை செய்வது தெய்வ அனுக்கிரகத்தைக் கொடுத்தும் நமோ ரஜோ குணங்களை நீக்கி சத்வ குணத்தைக் கொடுக்கும்- என்றார்.

கடந்த கால வன்செயல்களின்போது பாடசாலைக்கு பெருமளவில் சேதங்கள் ஏற்படாததாலும், பாடசாலையின் வளர்ச்சி மேன்மேலும் சிறந்தோங்க இந்த யாகம் நடத்தப்படுவதாக அதிபர் திருமதி ஏ. ராஜரத்தினம் கூறினார். (ஒ-ரி)

## சாவகச்சேரியிலும் கோமாரி

வடக்கில் கால்நடைகளுக்குப் பரவிவரும் கோமாரி நோய் சாவகச்சேரியைச் சேர்ந்த சரசாலைக்கும் பரவிவிட்டதாகத் தெரியவருகிறது.

இதுவரை இந்நோயால் 13 கால்நடைகள் இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அவற்றுள் நான்கு ஒரே வீட்டைச் சேர்ந்தவை.

இந்நோய்க்கான தடுப்பு மருந்து ஏற்றுவது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. (ஒ-31)

## இன்று

வட்டுக்கோட்டை, ஜூன். 29

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினர், அமரர் இ. விசுவநாதனின் நினைவு தினத்தையும் சாரணர் கண்காட்சியையும், ஏழாவது ஆண்டு நிறைவு விழாவையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இன்று புதன் கிழமை மாலை 2 மணியளவில் நடத்தவுள்ளனர்.

வைத்திய கலாநிதி ஸ்ரீகாந்த் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (ஒ-161)

## கிளர்ச்சி தீவிரம்

ஜெருசலம், ஜூன் 28

இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் பலஸ்தீனியர்களின் கிளர்ச்சி நேற்றுத் தீவிரமடைந்தது.

ஜெருசலத்தை இஸ்ரவேலுடன் இணைத்துக்கொண்ட 21 ஆண்டு நிறைவை ஒட்டி பலஸ்தீனியர்கள் பொதுவேலை நிறுத்தம் ஒன்றையும் மேற்கொண்டனர். (எ)

## மீண்டும் ஜனாதிபதி

ரெய்ஜாவிக் ஜூன் 28

ஐஸ்லாந்து ஜனாதிபதியாக திருமதி விஞ்டிஸ் பின்பொகா தொரிர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

அத்லாந்திக் தீவுகளில் ஒன்று ஐஸ்லாந்து. 57 வயதான திருமதி விஞ்டிஸ் 1980இல் முதல் முறையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (எ)

## அமெரிக்கப் படை வாபஸ்

மணிலா, ஜூன் 28

பிலிப்பீன்ஸில் இருந்து ஆறு இராணுவப் பிரிவுகளை அகற்ற அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

பிலிப்பீன்ஸில் கிளாக் விமானத் தளத்தில் இருந்து அமெரிக்க விமானப்படை விமானங்கள் பிரிவு ஒன்று தாயகம் திரும்பியது. (எ)

## யாழ் ஆஸ்பத்திரி....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

...கொண்டன. ஆனால்-

கொழும்பில் போதனை வைத்தியசாலைகள் அமைச்சு யாழ்போதனை வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்தது பற்றி புனர்வாழ்வு அமைச்சிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும் ஏன் எதற்[illegible]விக்கு [illegible] அளிக்கப்பட்ட [illegible] நிதியைப் பயன்படுத்த முடியும் என்ற நிலையும் தோன்றியுள்ளது.

யாழ் போதனை வைத்தியசாலை புனர்நிர்மாணத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை தேவையோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. அதனை வழங்குவதிலும் இழுபறி நிலை இருக்கிறதே! என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (ஒ- 5)

# ஜீ. சி. ஈ. பரீட்சை: ஒத்துழைப்புக் கோருகிறார் கல்விப் பணிப்பாளர்

பலாலி, ஜூன் 29

ஜீ. சி. ஈ. சாதாரண தர விசேட பரீட்சை ஒழுங்காக நடைபெற சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு: சபாநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பரீட்சைகளில் கடமை புரியும் ஊழியர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்:

அவர் மேலும் பேசியதாவது:-

கல்வியைத் தமது முழுமுதல் சொத்தாகக் கருதி வாழ்க்கை நடத்தும் கல்வி ஒழுக்கத்தினையுடைய யாழ் மக்கள் இதுவரை காலமும் தமது பரீட்சைகளில் மிகவும் நேர்மையாகவே நடந்துள்ளனர்:

இம்முறையும் தமது பரீட்சை நேர்மையை நிரூபிக்க எதிர்வரும் பரீட்சை ஒரு களமாகின்றது.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவோர், அதிகாரிகள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

இவ்வாறு திரு. சபாநாயகம் கேட்டுக்கொண்டார்: (இ-119)

## வேலை வாய்ப்பு

குவைத்

★ எலெக்றிசன், மெக்கானிக் (பொது)
★ கிளாக், கசியேர்ஸ்,
★ ரைப்பிஸ்ற், வெல்டேஸ்
★ செக்குறிற்றிக் காட்
★ வீடியோ ரெக்னிசன்
★ பாம் உதவியாளர்

உடன் காலையில் சந்திக்கவும்

சிவா மாஸ்ரர்
தொழில் ஆலோசகர்,
ஏழாலை.

(4769)

## மரண அறிவித்தல்கள்

### சிவபாதசுந்தரம் கலாதீபன்

திரு. திருமதி க. சிவபாதசுந்தரம் தம்பதிகளின் அன்பு மகன் சி. கலாதீபன் 28-6-88 அன்று அகால மரணமானார்.

இவர் தனபாலசிங்கம் (U.K.), நிமலகாந்தன் (கனடா), அசோக்குமார் (U.K.), தயாகாந்தன், சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 'கலாபவனம்' ஏழாலை மேற்கு இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக ஏழாலை மயானத்திற்கு பிற்பகல் 1-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சிவபாதசுந்தரம்

(4776)

### இராசையா வரதராசா

தாவடி தெற்கைச் சேர்ந்த இராசையா வரதராசா 08 - 06 - 88 இல் சுவிஸ்லாந்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசையா, திருமதி இராசையா தங்கம்மா ஆகியோரின் புதல்வரும், திருமதி இராசரத்தினம் சிவபாக்கியம், ஆறுமுகதாஸன், செல்வராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கனகரத்தினம், இராசரத்தினம், சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும், ஹேமராணி, ஹேமலதா, ஹேமரஞ்சினி, ஹேமச்சந்திரன், ஹேமறஜன், ஹேமதயாளினி, ஹேமசுபோதினி, தனுஷா ஆகியோரின் மாமனாரும் கிருசாந்தியா, தனுஷா, சஜீபன் ஆகியோரின் சிறிய தப்பனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-06-88 புதன்கிழமை 3.00 மணியளவில் தாவடி தெற்கில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
இ. ஆறுமுகதாசன்.

(4586)

இப்பத்திரிகை நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29 - 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road Jaffna Wednesday 29th June 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org